THE COURT OF THE DISTRICT MUNSIF, TIRUMANGALAM

**DEPOSITION OF WITNESS (P.W.1 )**

Solemnly affirmed and sworn by Tmt.Nagavalli Grade III Bench clerk on 27.10.2022. in accordance with the provisions of Act XX111.

அசல் வழக்கு எண்–249/2020

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கொண்டப்பன் | தாலுகா | |
| தகப்பனார் பெயர் | | ஊர் | |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

வா.சா. 1 முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1 வது சாட்சியாவேன். நான் எனது முதல் விசாரணையை எழுத்து மூல நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். அவை அனைத்தும் உண்மையே.

1406 பசளி ஆண்டிற்கான கிஸ்தி ரசீதை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**11.02.1997 ம் தேதியிட்ட கிஸ்தி ரசீது அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) 1410 பசளி ஆண்டிற்கான கிஸ்தி ரசீதை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**08.03.2001 ம் தேதியிட்ட கிஸ்தி ரசீது அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த பவர் பத்திரத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**26.03.2008 ம் தேதியிட்ட பவர் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது.**)

1ம் பிரதிவாதியின் பவர் ஏஜென்டான 2 ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த கிரைய ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**22.07.2008ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**13.07.2020 ம் தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

தாவா சொத்திற்கு எனது பெயரில் உள்ள கணினி பட்டாவை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**பட்டா எண். 1099ற்கான கணினி பட்டா வா.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

தாவா சொத்திற்கான வழிகாட்டுதல் மதிப்பை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**12.10.2020 ம் தேதியிட்ட வழிகாட்டுதல் மதிப்பு வா.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக இந்த வழக்கு வேறு ஒரு நாளைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)